# நடப்பு நிகழ்வுகள்- ஆகஸ்ட் 10 - 2017

❖ சர்வதேச உயிரி டீசல் தினம் (International Biodiesel Day) - ஆகஸ்ட் 10

❖ தமிழகத்தில் நிலத்தடி நீர் மட்டத்தை மேம்படுத்த அனைத்து ஆறுகளிலும் ரூ.350 கோடியில் 75 தடுப்பணைகள் மற்றும் 10 சிறிய அணைக்கட்டுகளை ஓராண்டுக்குள் கட்ட திட்டமிட்டுள்ளது.

❖ இந்தியா உள்ளிட்ட 80 நாடுகளைச் சேர்ந்த குடிமக்கள் இனி விசா இல்லாமல் கத்தார் நாட்டுக்கு வரலாம் என்று அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. வளைகுடா நாடுகளில் ஒன்றான கத்தார் மீது மற்ற வளைகுடா நாடுகள் பொருளாதார தடை விதித்துள்ளது அந்த பாதிப்பை தடுப்பதற்காக கத்தார் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

❖ சைகை மொழி பேசுவோருக்காக தேசிய கீதம் சைகை மொழியில் உருவாக்கப்பட்டுள்ளது. சுமார் மூன்றரை நிமிடம் ஓடக்கூடிய இந்த வீடியோவை டெல்லியில் நடைபெற்ற விழாவில் மத்திய அமைச்சர் திரு.மகேந்திர நாத் பாண்டே வெளியிட்டார்.

❖ பாகிஸ்தானின் அன்னை தெரசா என அழைக்கப்படும் ரூத் கேதரீனா மார்தா ∴பாவ் (80 வயது) 10.8.17 அன்று காலமானார். ஜெர்மனியைச் சேர்ந்த கன்னியாஸ்திரி பாகிஸ்தானில் தொழுநோய் ஒழிக்க தன் வாழ்வை அர்பணித்தவர்.

❖ இந்தியாவின் முதல் "உலங்குவானூர்தி டாக்ஸி சேவை" (Indias first Hellcopter-Taxi, HELI-TAXI) கர்நாடக மாநில தலைநகர் பெங்களூரு சர்வதேச விமான நிலையத்தில் தொடங்கப்பட்டது. பெங்களூருவில் போக்குவரத்து நெரிசலில் சிக்காமல் எளிதில் பயணம் செய்ய இந்த "உலங்குவானூர்தி டாக்ஸி சேவை" தொடங்கப்பட்டுள்ளது.

❖ 16-வது உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டிகள் லண்டனில் நடைபெற்று வருகிறது. இதில் 400 மீ தடை தாண்டுதல் ஓட்டத்தில் நார்வே வீரர் கேர்ஸ்டன் வார்ஹோல்ம் தங்கம் வென்றார்.

❖ பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் புதிய தலைவராக நஜம் சேத்தி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இதற்கு முன் ஷகாரியர்கான் (வயது 83) இப்பதவியில் இருந்தார்.

❖ தேசிய திறன் மேம்பாட்டுக்கழகம் (NSDC) கூகுள் நிறுவனத்துடன் இணைந்து ஆண்ட்ராய்ட் திறன் மேம்பாட்டுத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

❖ உத்திரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் மாநில தலைநகரான இலக்னோவில் உள்ள அவரது உத்தியோகப்பூர்வ இல்லத்தில் இருந்து "நமாமி கங்கா ஜகரிதி யாத்ரா" என்ற புதிய விழிப்புணர்வு பிரச்சாரத்தை தொடங்கிவைத்தார். இதன் நோக்கம் கங்கை நதியின் கரையோரப் பகுதிகளை தூய்மைப்படுத்துதல் மற்றும் பாராமரித்தல் ஆகும்.

❖ மறைந்த படைவீரர்களின் மனைவிக்கு 100% ஓய்வூதியத்தை வழங்க BC கந்தூரி குழுவை பாராளுமன்றம் பரிந்துரைத்துள்ளது. பொதுவாக ஒரு படைவீரர் இறந்த பின் அவரின் மனைவிக்கு 60% மட்டுமே வழங்கப்பட்டுவருகிறது. இது அந்த குடும்பத்திற்கு போதுமானதாக இல்லை என இக்குழு தெரிவித்துள்ளது.

❖ மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சர் உபேந்திர குஷ்வாகா ஆகஸ்ட் 9 புதுடில்லியில் நூல்களை பள்ளிகள் மற்றும் வீடுகளுக்குச் சென்று வழங்கும் NCERT வலைதளத்தை தொடங்கி வைத்தார். இதற்கான இணையதளம் www.ncertbooks.ncert.gov.in இதில் இலவசமாக நூல்களை பதிவிறக்கம் செய்யலாம்.

❖ தஞ்சை மாவட்டம் பூதலூர் தாலுகாவிலுள்ள நடுப்படுகை கிராமத்தைச் சேர்ந்தவர் ஜே.மாரியம்மாள். தஞ்சை மாவட்டத்தில் உள்ள 25 கிராமங்களில் தண்ணீர் சிக்கன விழிப்புணர்வு பிரச்சாரங்களை மேற்கொண்டார். இவருக்கு நபார்டு வங்கி "தஞ்சையின் தண்ணீர் தூதர்" என மாரியம்மாளை கௌரவித்துள்ளது.

OXFORD IAS ACADEMY